# In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.

O.S.No. 29/2021 தேதி- 25.06.2025
(P.W.1) - ராஜேந்திரன்

குறுக்கு விசாரணை

1. நான் கருங்கல் புனித அந்தோனியார் ஆலயத்தில பங்கு பேரவை துணை தலைவராக உள்ளேன் என்றால் சரிதான். மேற்சொன்ன பங்கு பேரவை தனிப்பங்கு என்றால் சரிதான். மேற்சொன்ன பங்கு பேரவை குழித்துறை RC டயோசிக்கு உட்பட்டது என்றால் சரிதான். மேற்சொன்ன ஆலயம் மற்றும் ஆலயத்தை சுற்றி ஆலயத்திற்கு சொந்தமான சொத்துகள் உள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன சொத்துக்களுக்கான ஆவணங்களை ஆலயத்தில் பாராமரிக்கப்பட்டு வருகிறது என்றால் சரிதான். இவ்வழக்கில் 1-ஆம் வாதி அருள் தந்தை மரியஅற்புதம் பங்கு பேரவையின் தலைவர் என்றால் சரிதான். அவர் தற்போது பங்கு பேரவையின் தலைவராக இல்லை என்றால் சரியல்ல. அவர் தற்போது பனவிளை என்ற பங்கு பேரவை தலைவராக உள்ளார் என்றால் சரிதான். அவர் எப்போது இடம் மாற்றம் செய்யப்பட்டார் என்றால் மே மாதம் 2024-ஆம் ஆண்டாகும். தற்போது 1-ஆம் வாதியின் இடத்தில் பங்கு பேரவை இடத்தில் எக்கர்மென்ஸ் மைக்கேல் வேலை பார்த்து வருகிறார் என்றால் சரிதான்.

2. இவ்வழக்கில் உள்ள வாதிகள் 2 முதல் 5 வரையானவர்கள் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்றால் சரிதான். மேற்சொன்ன 1-ஆம் வாதி மரியஅற்புதம் இடம் மாற்றம் பெற்ற பிறகு கருங்கள் அந்தோனியர் ஆலயத்தில் எந்த அதிகாரமோ கிடையாது என்றால் சரிதான். ஆலயத்தின் பங்கு பேரவை தேர்தல் 3 ஆண்டுக்கு ஒரு முறை நடைபெறும் என்றால் சரிதான். நான் 2019-ஆம் ஆண்டில் இருந்து தற்போது வரை துணை தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு செயல்பட்டு வருகிறேன் என்றால் சரிதான். 2022-ஆம் ஆண்டு பங்கு பேரவைக்கான தேர்தல் நடைபெற்றது என்றால் சரிதான். மேற்சொன்ன தேதியிலும் நான் துணை தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டேன் என்றால் சரிதான்.

3. தற்போது பங்கு பேரவை செயலாளராக சந்திரகலா என்பவர் செயல்பட்டுவருகிறார் என்றால் சரிதான். 2022-ஆம் ஆண்டுக்கு பிறகு பங்கு பேரவை துணை செயலாளராக அனிஷ்பாப்பா என்பவர் செயல்பட்டு வருகிறார் என்றால் சரிதான். 2022-ஆம் ஆண்டுக்கு பிறகு பங்கு பேரவை பொருளாளராக சுரேஷ் என்பவர் செயல்பட்டு வருகிறார் என்றால் சரிதான். இவ்வழக்கில் 1 முதல் 5 வரையான வாதிகள் கருங்கல்

ஆலயத்தில் நிருவாகிகள் என்றால் சரிதான். மேற்சொன்ன 1 முதல் 5 பேரும் வரையான வாதிகள் ஆலயத்திற்காக பிரதிநிதி அடிப்படையில் (Representative Capcity) இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இவ்வழக்கில் 1-ஆம் வாதி 2022 பிறகு இடம் மாற்றம் பெற்ற பின்பு இந்த வழக்கை நடத்த எந்த அதிகாரமும் இல்லை என்றால் சரிதான்.

4. இவ்வழக்கின் 3-ஆம் வாதி பெற்றோம்மாள் 2022-ஆம் பிறகு பங்கு பேரவையில் நிர்வாக செயலாளராக இல்லாததால் அவருக்கும் வழக்கை நடத்த அதிகாரம் இல்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் 4-ஆம் வாதி வேர்ஜின் ஜெனோ துணை செயலாளராக இல்லாததால் அவருக்கும் வழக்கை நடத்த அதிகாரம் இல்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் 5-ஆம் வாதி பால்தாஸ் என்பவர் பொருளாராக இல்லாததால் அவருக்கும் வழக்கை நடத்த அதிகாரம் இல்லை என்றால் சரிதான். தற்போதைய பங்கு பேரவை தலைவர் அருள் தந்தை எக்கர்மென்ஸ் மைக்கேல், அனிஷ்பாப்பா, சுரேஷ், சந்திரகாலா ஆகியோர்களை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்காததால் இவ்வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. இவ்வழக்கில் உள்ள வாதிகள் 1 மற்றும் 3 முதல் 5 வரையான வாதிகளுக்கு இவ்வழக்கை நடத்த எந்த அதிகாரமும் இல்லை என்றால் சரியல்ல.

5. அவசியமான தரப்பினர்களை இவ்வழக்கில் சேர்க்காததால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்சொன்ன ஆலயத்தில் சுமார் 1300 குடும்பங்கள் உள்ளது என்றால் சரிதான். அவைகள் 19 அன்பியம் மற்றும் 14 சபை சங்ககளாக செயல்பட்டு வருகிறது என்றால் சரிதான். வழக்கின் பிரதிவாதி மற்றும் அவர் குடும்பத்தினர் எங்கள் ஆலய பங்குட்பட்ட உறுப்பினர்கள் என்றால் சரிதான். இவ்வழக்கில் உள்ள பிரதிவாதி 2013 முதுல் 2019 வரை பங்கு பேரவையில் துணை தலைவராக செயல்பட்டு வந்தார் என்றால் சரிதான். இவ்வழக்கின் பிரதிவாதி துணை தலைவராக செயல்பட்ட காலத்தில் சமுக நலக்கூடம் மற்றும் கலையரங்கம், தரை கற்கள் அமைக்கப்பட்டது என்றால் சரிதான். பிரதிவாதி துணை தலைவராக செயல்பட்ட காலத்தில் நிறை வளர்ச்சி பணிகள் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான் 58 லட்சம் கடன் உள்ளது.

6. மேற்சொன்ன 58 லட்சம் கடன் ஏற்பட்டது என்பது வழக்கிற்காக சொல்லப்பட்டுள்ள பொய்யான சங்கதி என்றால் சரியல்ல. அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யமுடியுமா என்றால் முடியும். எங்கள் பங்கு பேரவை ஆலயத்திற்கு சொந்தமான கப்பியரை ஏ-கிராமத்தின் கருணை மாத மலையில் 1 ஏக்கர் 18 சென்ட்

சொத்துள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன கருணை மாத மலையின் அடிவாரத்தில் 2 செண்ட் சொத்தில் ஒரு குருசடி உள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கு பட்டிகை சொத்தின் கட்டிடம் கருங்கல் கிராமம் ரீசர்வே எண்.611/22 என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்தில் கருங்கல் கதவு எண்.17/55 ஏ என்ற ஆலயத்திற்கு உரிமைப்பட்ட 2 மாடி கட்டிடம் உள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன கட்டிடம் சுமார் 50 ஆண்டுகள் பழைமையான என்றால் சரிதான். சுமார் 30 ஆண்டுகளுக்கு மேலாக மாத ஸ்டோர் என்ற ஸ்டேசனரி கடையை தரைத்தளத்தில் நடத்தி வருகிறார் என்றால் சரிதான். பட்டிகை சொத்தின் கிழக்கு பக்கம் ஆசாரி என்பவரின் சொத்துள்ளது என்றால் சரிதான்.

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிகாக வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).